தினமலர்

# பெண்கள் மலர்

டிசம்பர் 26, 2015
நாளிதழுடன் இணைப்பு



## பாரத பிரதமர் முன் பரதம்!

தோழிகளுக்கு இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!

# பாரத பிரதமர் முன் பரதம்



இவர் பிரமாதமான பரதக்கலை கலைஞி. இவரின் நாட்டியங்கள் பல கண்டு ரசித்திருப்போம், பின்புலம் அறியாமல். தொன்று தொட்டு பரதக்கலையினை மூச்சாக சுவாசிக்கும் இவரின் சலங்கையொலிக்கு இடியும் ஜதி சேர்க்கும்.



கீதா ஸ்ரீதர்

ஆனால் உங்களுக்கு அறிமுகமற்ற நபர். அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அவரது தங்கையின் பெயரைச் சொன்னால் சட்டென்று உங்கள் மூளையில் பல்ப் எரியும்.

இவர்தான் நடிகை சுகன்யாவின் சகோதரி கீதா ஸ்ரீதர். இரண்டு பிரதமர்கள் முன் நடனமாடிய சந்தோஷத்துடன், லண்டனில் வசிக்கும் அவருடன் பெண் மலருக்காக இணைய வாயிலாக சந்திப்பு...

**உங்களைப்பற்றி...**

பிறந்தது, தவழ்ந்தது வளர்ந்ததெல்லாம் சென்னை. அப்பா ரமேஷ், அம்மா பாரதி. தங்கையைப் பற்றி சொல்ல தேவையில்லை பிரபல நடிகை சுகன்யா. சிறு வயதிலிருந்தே இருவரும் பரதப் பிரியர்கள். கலாஷேத்ராவில் பரதம் கற்றோம். நாட்டிய ஆர்வத்தால் கல்லூரியில் இந்திய வரலாறுகள் குறித்து படித்தேன். படிப்புடன் சந்திரலேகா உடன் சேர்ந்து நடன நிகழ்ச்சிகளும் செய்து வந்தேன்.

**குருநாதர், அரங்கேற்றம்?**

குருநாதரின் லிஸ்ட் சற்று நீளும். ஆனால், ஒவ்வொரு ஆசானும் ஒவ்வொரு உலகம்.












நடிகை சுகன்யாவுடன் கீதா ஸ்ரீதர்

அவர்களிடம் நான் கற்றுக்கொண்டது ஏராளம். ஆண்டுக்கொரு ஆசானோடு பயணம் துவங்கினாலும், ஒவ்வொருவரும் என்னை மிளிரும் சிலையாக செதுக்கினர். என்னை மெருகேற்றியவர்களில் விஜயலட்சுமி கிருஷ்ண சுவாமியின் பங்கு முக்கியமானது. நான் அரங்கேற்றம் செய்த போது இவர்தான் என் குரு. மயிலாப்பூர் பாரதிய வித்யா பவனில் அரங்கேற்றம் நடந்தது.



### திருமணத்துக்கு முன், திருமணத்திற்குப் பின்...

சிறு வயதில் 24 மணி நேரமும் நாட்டிய உடையிலேயே வலம் வருவேன். சந்திரலேகாவின் டான்ஸ் பள்ளியில் பணியாற்றிய போது பரதத்தோடு, களரியும், யோகாவும் கற்றேன். 1992ம் ஆண்டு எனக்கு திருமணம் ஆனது. கணவர் லண்டனில் டாக்டர். அவரும், என் மாமியார், மாமனாரும் நடனம் ஆட என்னை ஊக்குவித்ததால், என் நடன வாழ்க்கை எப்போதும் போலவே சென்றது. கணவர் குடும்பத்தாரின் ஒத்துழைப்புடன் லண்டனில் நிறைய நடன நிகழ்ச்சிகள் நடத்தினேன். கேன்த் பல்கலைக்கழகத்தில் நடனம் சம்பந்தமான முதுகலை பட்டமும் பெற்றேன்.

இதற்கிடையில், என் கணவர் ஹார்ட்அட்டாக்கில் காலமானார். அந்த துயரத்தை மறக்க முழுக்க முழுக்க என் பெற்றோர் உதவியுடன் என் கவனத்தை நாட்டியத்தின் மேல் செலுத்தினேன். 14 ஆண்டுகளாக லண்டனில்தான் வசிக்கிறேன். அங்கிருக்கும் லீவிஷாம் என்ற தமிழ்ப் பள்ளியில் நடனம் கற்றுத் தருகிறேன்.



என் பெண் ஒடிசி நடனக் கலைஞர். அவரின் அரங்கேற்றம் 2013 ஆண்டு பாரதிய வித்யா பவனில் நடந்தது. 2016ம் ஆண்டு இருவரும் இணைந்து நடனமாட முடிவெடுத்துள்ளோம்.

**நம் நாட்டு பிரதமர்கள் முன் நடனமாடிய அனுபவம்...**

1987ம் ஆண்டு... ரஷ்யாவில் 'இந்திய திருவிழா' தலைப்பில் நிகழ்ச்சி நடந்தது. அதில் பங்கேற்க சந்திரலேகா நடனக் குழுவுக்கு வாய்ப்பு கிட்டியது. அக்குழுவில் நானும் ஓர் உறுப்பினர். அப்போது நான் நடனத்தை பொறுத்தவரை மாணவிதான். ஒரு கணம் வந்திருந்த விருந்தினரின் பக்கம் கண்கள் பாய்ந்தது. திகைத்து போனேன், காரணம் அப்போதைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, அவரது மனைவி சோனியா காந்தி, மற்றும் ரஷ்யாவின் பிரதமர் மைக்கேல் கோர்பசேவ், அவருடைய மனைவி ரைசா கோர்பசேவ். இரு நாட்டு பிரதமர்கள்தான் விழாவின் சீப் கெஸ்ட். சந்தோஷமான, அதே சமயம் என்னால் மறக்க முடியாத அனுபவம்.

அந்த ஷாக்கில் இருந்து மீளாத எனக்கு, அடுத்துமொரு வரப்பிரசாதம் சமீபத்தில் நம் பிரதமர் மோடியின் முன்பு நடனமாடியது. சமீபத்தில் லண்டனுக்கு வந்த மோடியை வரவேற்க நிறைய நிகழ்ச்சிகள் நடத்தினார்கள். அதில் என் நடனமும் ஒன்று. பிரதமர் மோடியுடன், லண்டன் பிரதமர் டேவிட் கேமரூன் மற்றும் அவர் மனைவியும் இருந்தார்கள்.

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் முன்பு நடன மாணவியாக நடனமாடிய நான், பிரதமர் மோடியின் முன்பு யோகாவை இசைக் கேற்றபடி நானே வடிமைத்து நடனமாடினேன் என்பது கூடுதல் சந்தோஷம். 28 ஆண்டுகளுக்குப் பின் இப்படியொரு சந்தர்ப்பம் நான் எதிர்பாராதது.

**பிரதமருடனான உரையாடல் பற்றி...**

இன்று நினைத்தாலும் கனவு போலவே உள்ளது. இங்கிலாந்துக்கு வருகை புரிந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கும் நிகழ்ச்சி. என்னுடன் சில கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அவரைப் பார்த்த முதல் சந்திப்பிலேயே கவர்ந்திழுக்கும், அன்பான தலைவராக தெரிந்தார். அவருடன் கைக்குலுக்கி விழாவுக்கு அழைத்தேன். வேடிக்கை மனிதர் அத்தருணத்தில், 'பாரம்பரிய கலை நிகழ்ச்சி அரங்கேறும் வேளையில் கேமரூனின் மனைவியையும் சேலை அணியச் சொல்லுங்களேன்' என நகைச் சுவைத்தார்.

மறு கணமே, தீவிரமாக உரை நிகழ்த்த தொடங்கினார். இவரைதான் சந்தித்தேனா என என்னை நானே கிள்ளி பார்த்துக்கொண்டேன். உரை முடிந்ததும் தீபாவளி கொண்டாட்டங்கள் இரு நாட்டு பிரதமருடன் தொடங்கின.

**நடனம் தவிர பிற துறையில் உள்ள ஆர்வங்கள்?**

சமையல், ஓவியம், கோலம் போடுவதில் ஆர்வம் உண்டு. பள்ளியில் படிக்கும் போது கோலப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றிருக்கிறேன். 1988ம் ஆண்டு நான் வரைந்த 'ஸ்திரீ' என்ற பெயரில் மாஸ்கோவில் கண்காட்சியாக வைத்தேன்.

**பொழுதுபோக்குகள்...**

உண்மையில், எனக்கிருக்கும் 24 மணிநேரமே போதவில்லை. நடனத்துக்குப் பின் என்னை அதிகளவில் மூழ்கடித்தது, புத்தகங்கள்.

**தங்கை போன்று நடிப்பில் நாட்டமில்லையா?**

கண்டிப்பாக மாட்டேன். நாட்டியம் அளவுக்கு பிற துறையின் மீது ஈடுபாடு ஏற்பட்டதில்லை. நடிகை என்பதற்கு தேவையான தகுதிகள் எனக்கில்லை என உணர்கிறேன். நடிப்புக்காக பல மணிநேரங்கள் மேக் அப் செய்து பொறுமையுடன் காத்திருக்கும் நடிகர்களுக்கு ஓர் சல்யூட். என் தங்கைக்கும் சேர்த்து...

**எதிர்கால திட்டம்...**

2016. புத்தாண்டில் இரு இலக்குகளை நோக்கி பயணிக்க உள்ளேன். நவீன யுக்தியில் பரதத்தின் பெருமையை அயல்நாட்டில் பரப்ப வேண்டும். என்னிடம் பரதம் பயிலும் மாணவர்களுக்கு நான் கூறும் ஒரே அறிவுரை இதுதான்... வாழ்க்கையில் எதற்காகவும் நீங்கள் கற்ற கலையை விட்டுக் கொடுக்காதீர்கள்.

- ராஜி வெங்கடேஷ், ஜெயஸ்ரீ